

மதுரை மாவட்டம் பாண்டி அவிநாசி ஸ்தலமாகிய

தேவாரம் மாநகரம் அருள்நெறிக் கழகத்தாரால்

வெளியிடப்பட்டது.

திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்ற

தேவாரம் திருமுறை

திருநேரிசைப் பதிகம்.

சிவமயம்.

முன்னுரை.

சீன அரக்கர்கள் ஆணவத்தாலும் நாட்டாசையாலும், திருக்கயிலாயத்தையும் அதற்குப்போகும் வழிகளையும் கவர்ந்து கொண்டு நமது நாட்டு எல்லைக்குள் போரிட்டு வருகின்றனர்.

ஒரு காலத்தே இலங்கை வேந்தனுகிய இராவணன் ஆணவ முனைப்பினுல் திருக்கயிலாயமலையைப் பெயர்த்தெடுக்க முயன்ருன். அப்போது எல்லாம் வல்ல இறைவன் திருக்கயிலாயப் பெருமான் தமது பெருவிரல் நுனியை ஊன்றியதும், உடனே இராவணன் அலறி வீழ்ந்தான் என்ற செய்தி ஒவ்வொரு பாட்டிலும் அடங்கிய திருநேரிசைப் பதிகம் திருநாவுக்கரசு சுவாமிகளால் பாடப்பெற்றுள்ளது.

அதே போல் சீன அரக்கர்களை நம் எல்லையிலிருந்து வெருட்டி ஓட ஓடச் செய்வதற்கு கீழே கொடுக்கப்பட்டிருக்கும் திருநேரிசைப் பதிகத்தை நாம் நாள் தோறும் காலை மாலை கோவில், மடாலயம், அருள்நெறிக்கழகம், இல்லங்களிலும் பாராயணம் செய்து இறைவனை வேண்டினால் கட்டாயம் நமக்கு வெற்றி கிடைக்குமென்பது திண்ணம்.

எல்லைப் போராட்டத்தில் வெற்றிகாண எத்தனையோ வகையான முயற்சிகளை மேற்கொள்கிறோம். அதோடுகூட இப்பிரார்த்தனைப் பாடல்களும் இருந்தால் விசேஷம் எனக் கருதி இதை வெளியிட்டுள்ளோம்.

போற்றித் திருத்தாண்டகம்,

பாட்டான நல்ல தொடையாய் போற்றி
பரிசை அறியாமை நின்ருய் போற்றி
சூட்டான திங்கள் முடியாய் போற்றி
தூமாலை மத்தம் அணிந்தாய் போற்றி
ஆட்டான தஞ்சும் அமர்ந்தாய் போற்றி
அடங்கார் புரமெரிய நக்காய் போற்றி
காட்டானை மெய்த்தோல் உரித்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

திருநாவுக்கரசு நாயனுர் தேவாரம் திருநேரிசை.

கனகமா வயிர முத்து மாமணிக் கயிலை கண்டும்
உனகனு யரக்கன் ஓடி யெடுத்தலும் உமையா ளஞ்ச
அனகனுய் நின்ற வீசன் ஊன்றலும் அலறி வீழ்ந்தான்
மனகனுய் ஊன்றினனேல் மறித்துநோக் கில்லையன்றே 1

கதித்தவன் கண்சிவந்து கயிலைநன்மலையை ஓடி
அதிர்த்தவன் எடுத்திடலும் அரிவைதான் அஞ்ச ஈசன்
நெதித்தவன் ஊன்றியிட்ட நிலைஅழிந்து அலறிவீழ்ந்தான்
மதித்திறை ஊன்றினானேல் மறித்து நோக்கில்லையன்றே 2

கறுத்தவன் கண்சிவந்து கயிலைநன்மலையைக் கையால்
மறித்தலும் மங்கை அஞ்ச வானவர் இறைவன் நக்கு
நெறித்தொரு விரலால் ஊன்ற நெடுவரைபோல வீழ்ந்தான்
மறித்திரை ஊன்றினானேல் மறித்து நோக்கில்லையன்றே 3

கடுத்தவன் கண்சிவந்து கயிலைநன்மலையை ஓடி
எடுத்தலும் மங்கை அஞ்ச இறையவன் இறையே நக்கு
நொடிப்பன விரலால் ஊன்ற நோவதும் அலறியிட்டான்
மடித்திறை ஊன்றினானேல் மறித்து நோக்கில்லையன்றே 4

கன்றித்தன் கண்சிவந்து கயிலைநன்மலையை ஓடி
வென்றித்தன் கைத்தலத்தால் எடுத்தலும் வெருவமங்கை

நன்றுத்தான் நக்குநாதன் ஊன்றலும் நசுழ வீழ்ந்தான்
மன்றித்தான் ஊன்றினனேல் மறித்து நோக்கில்லையன்றே 5

களித்தவன் கண்சிவந்து கயிலைநன் மலையை ஓடி
நெளித்தவன் எடுத்திடலும் நேரிழை அஞ்ச நோக்கி
வெளித்தவன் ஊன்றி இட்ட வெற்பினால் அலறி வீழ்ந்தான்
மளித்திறை ஊன்றினனேல் மறித்துநோக்கில்லைஅன்றே 6

கருத்தனாய் கண்சிவந்து கயிலைநன் மலையைக் கையால்
எருத்தனாய் எடுத்தவாறே ஏந்திழை அஞ்ச ஈசன்
திருத்தனாய் நின்றதேவன் திருவிரல் ஊன்ற வீழ்ந்தான்
வருத்துவான் ஊன்றினனேல் மறித்துநோக்கில்லையன்றே 7

கடியவன் கண்சிவந்து கயிலைநன் மலையை ஓடி
வடிவுடை மங்கை அஞ்ச எடுத்தலும் மருவநோக்கிச்
செடிபடத்திருவிரல்லால் ஊன்றலும் சிதைந்து வீழ்ந்தான்
வடிவுற ஊன்றினனேல் மறித்துநோக்கில்லையன்றே 8

கரியத்தான் கண்சிவந்து கயிலை நன்மலையைப் பற்றி
இரியத்தான் எடுத்திடலலும் ஏந்திழை அஞ்ச ஈசன்
நெறியத்தான் ஊன்றுமுன்னம் நிற்கிலாது அலறி வீழ்ந்தான்
மரியத்தான் ஊன்றினனேல் மறித்து நோக்கில்லையன்றே 9

கற்றனன் கயிலைதன்னைக் காண்டலும் அரக்கன் ஓடிச்
செற்றவன் எடுத்தவாறே சேயிழை அஞ்ச ஈசன்
உற்றிறை ஊன்று முன்னம் உணர்வழிவகையால் வீழ்ந்தான்
மற்றிறை ஊன்றினனேல் மறித்து நோக்கில்லையன்றே 10

திருச்சிற்றம்பலம்.

—;—

இப்புஸ்தகம் வெளிவருவதற்கு பொருள்உதவிசெய்த அருள்நெறிக்கழக அங்கத்தினர்கள்.

திரு,	வெ. பொன்னுச்சாமிபிள்ளை அவர்கள்	ரூ 5—00
,,	R. S. ராமநாதபிள்ளை அவர்கள்	5—00
,,	ஆ. சுருளியாண்டி பிள்ளை அவர்கள்	5—00
,,	நா. சு. தி. முத்துராமுசெட்டியார் அவர்கள்	5—00

திரு அ. ரா. திருஞானசம்பந்தஞ்செட்டியார் அவர்கள்	5—00
,, E. P. K. நடராஜ் நாடார் அவர்கள்	5—00
,, அ. ரா. ப. ராமலிங்கம் பிரதர்ஸ்	5—00
,, ப. தங்கராஜ் செட்டியார் அவர்கள்	3—00
,, மைனர் கோபால் செட்டியார் அவர்கள்	3—00
,, R. C. செல்லப்பன் அவர்கள்	2—00
,, நா. கோபால் செட்டியார் அவர்கள்	2—00
,, க. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள்	2—00
,, ச. லோகநாயகம் பிள்ளை அவர்கள்	2—00
,, ஏஜண்டு பொன்னுசெட்டியார் அவர்கள்	2—00
,, கு. ரெ. வா. ராமசாமி செட்டியார் அவர்கள்	2—00
திருமதி நர்ஸ் ஜெகதாம்பாள் அவர்கள்	2—00
திரு, மு. திம்மி செட்டியார் அவர்கள்	1—00
,, தி. திம்மி செட்டியார் அவர்கள்	1—00
,, S. சங்கரய்யர் அவர்கள்	1—00
,, M. ரங்கசாமி பிள்ளை அவர்கள்	1—00
திருமதி S. சரஸ்வதியம்மாள் அவர்கள்	1—00
ஆகமொத்தம் ரூ.	60—00

செலவு விபரம்.

புஸ்தகம் அச்சுக்கூலி (1000 புஸ்தகங்கள்)	ரூ	46—00
அவிநாசியப்பன் கோவில் பூஜை செலவு		1—00
அருள்நெறிக்கழக பூஜை செலவு		1—00
வெளியூர்களுக்கு புஸ்தகம் அனுப்ப தபால்செலவு		12—00
ஆகமொத்த செலவு		60—00

இப்படிக்கு,

க. கிருஷ்ணசாமி நாயுடு,
செயலாளர்,

வெ. பொன்னுச்சாமி பிள்ளை,
தலைவர்,

அருள்நெறிக்கழகம், தேவாரம்.

9—12—62

வேண்டுகோள்!

இப்புஸ்தகத்தைப் பார்க்கும் அன்பர்கள் இதன்கண் உள்ள பாடல்களை ஆயிரக்கணக்கான புஸ்தகமாய் அச்சிட்டுப் பரப்புமாறு பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

மகாராணி அச்சகம் தேவாரம்: 62